

தனி பிரதி
ரூ.10/-

Single Copy
Rs.10/-

ANNUAL SUBSCRIPTION
Rs.120/-




# பொறியியல் கதிர்
# PORIYIYAL KADHIR

TAMIL & ENGLISH MONTHLY


| கதிர் 54 | பாரிப்பு 11 | திருவள்ளுவர் ஆண்டு 2054 | ஆகஸ்ட் - 2023 |
|---|---|---|---|
| KADHIR 54 | PAARIPPU 11 | THIRUVALLUVAR AANDU 2054 | AUGUST - 2023 |


## HAPPY INDEPENDENCE DAY





நூற்றாண்டு விழா சங்கம் - A CENTENARY ASSOCIATION

தோற்றம்
1910

தமிழ்நாடு பொறியியல் சங்கம்
பொதுப்பணித்துறை
சேப்பாக்கம், சென்னை - 600 005.

நூற்றாண்டு
2010

அரசு ஆணை எண்: Ms. 822 நாள். 27.09.1928 அங்கீகரிக்கப்பட்டது

TAMILNADU ENGINEERING ASSOCIATION - PWD
CHEPAUK, CHENNAI - 600 005.

Website : www. tnengga. org
email id : tneapwd@yahoo.co.in

தமிழ்நாடு பொறியியல் சங்கம் திருச்சி கிளை மற்றும் புதுக்கோட்டை கிளைகளின் பொதுக்குழுக்கூட்டத்தில் பதவி உயர்வு மற்றும் பணிஓய்வு பெற்ற பொறியாளர்களுக்கு பாராட்டு தெரிவித்தல்.















**பொதுச்செயலாளர் மடல்**

**மடல் - 11 (2022 - 2023)**



# தொடரும்

## நம் பயணம் .......

**அன்பார்ந்த பொறியாளர் சகோதர, சகோதரிகளே! வணக்கம்!**

தொழில்நுட்ப உதவியாளரிலிருந்து உதவிப் பொறியாளர் பதவி பெற்றவர்களுக்கு எதிராக உச்சநீதிமன்றத்தில் நீதிமன்ற தடையாணை (Stay Order) இருந்ததால் உதவிசெயற்பொறியாளர் பதவி உயர்வு வழங்க முடியாத சூழ்நிலை இருந்து வந்தது.

கடந்த 17.07.2023 அன்று வழக்கு விசாரணைக்கு வந்து தள்ளி வைக்கப்பட்டது. மீண்டும் கடந்த 01.08.2023 அன்று வழக்கு விசாரணைக்கு வந்து நீதிமன்ற தடையாணை நீக்கப்பட்டுள்ளது. மேலும் மனுதாரரின் Appeal அனுமதிக்கப்பட்டுள்ளது. Special Leave petition-ல் (SLP) appeal அனுமதிக்கப்பட்டு (Leave granted) Civil appeal ஆக உள்ளது. வழக்கு தொடர்ந்து நடைபெறும்.

இதில் ஒரு வருத்தம் என்ன என்றால் ஏற்கனவே 14.09.2017 அன்று உச்சநீதிமன்ற நீதியரசர்கள் அருண்மிஸ்ரா, மோகன் M.சந்தானகவுடர் அமர்வில் அரசு ஆணை எண்.1 பொ.ப.து நாள். 02.01.1990 சம்பந்தமான வழக்கில் நமது சங்கம் வெற்றி பெற்றது. மீண்டும் அதே அரசு ஆணை எண்.1 க்கு எதிராக உச்சநீதிமன்றத்தில் வழக்கு தொடுத்து அலைய விட்டிருக்கிறார்கள். இந்த வழக்கில் தோற்று விடுவோம் என்று தெளிவாக தெரிந்திருந்தும் வீம்புக்காக வழக்கு தொடுப்பது என்ன மனநிலை என்று தெரியவில்லை.

தமிழ்நாடு பொறியியல் சங்கம் சந்தித்த பல வழக்குகளில் ஒரு வழக்கில் கூட தோற்றதில்லை. மின்னியல் (Electrical) சில தனி நபர்கள் தொடுத்த வழக்கு இதில் விதிவிலக்கு.

பொதுப்பணித்துறையில் கடந்த ஆண்டு செப்டம்பர் மாதம் AEE Panel அரசாணை வழங்கப்பட்டு உச்சநீதிமன்ற தடையாணையால் நிறுத்தி வைக்கப்பட்டவர்களில் 22 உதவிப் பொறியாளர்களுக்கும், 7 இளநிலைப் பொறியாளர்களுக்கும் உதவிசெயற்பொறியாளர் பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளது.

மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர், முதன்மை செயலாளர், முதன்மை தலைமைப் பொறியாளர் (பொது) ஆகியோர்களுக்கு தமிழ்நாடு பொறியியல் சங்கம் நெஞ்சார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறது.

பதவி உயர்வு பெற்ற பொறியாளர் சகோதர, சகோதரிகளுக்கு தமிழ்நாடு பொறியியல் சங்கம் நெஞ்சார்ந்த நல்வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறது.

நீர்வளத்துறையில் உதவிசெயற்பொறியாளர் பதவி உயர்வு அளிப்பதற்கான பணிகள் நடைபெற்று வருகிறது.

**வாழ்க தமிழ்நாடு பொறியியல் சங்கம்**
**வளர்க பொறியாளர்களின் சங்க உணர்வு**
**தேச நலன் காப்போம்.**

இத்துடன் இந்த மடலை நிறைவு செய்கிறேன். நன்றி.

(த. முருகேசன்)
பொதுச் செயலாளர்

Er.D. MURUGESAN, General Secretary
Cell Nos. 9444 999 588, 9444 65 65 44
E.mail: d.murugavelsivan@gmail.com

# அறிவிப்பு

கடந்த பொதுக்குழுவில் தீர்மானித்தபடி தமிழ்நாடு பொறியியல் சங்கத்திலிருந்து ஓய்வு பெறும் பொறியாளர்களுக்காக புதிய சங்கம் பதிவு செய்யும் பணிகள் நடைபெற்று வருகிறது. எனவே தமிழ்நாடு பொறியியல் சங்கத்திலிருந்து ஓய்வு பெறும் பொறியாளர்கள் அனைவரும் தங்களை இந்த சங்கத்தில் இணைத்துக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

- தமிழ்நாடு பொறியியல் சங்கம்

ITEM NO.11 COURT NO.4 SECTION XII

SUPREME COURT OF INDIA

RECORD OF PROCEEDINGS

Petition(s) for Special Leave to Appeal (C) No(s).17269-17271/2022

(Arising out of impugned final judgment and order dated 03-08-2022 in WA No. 82/2015 03-08-2022 in WA No. 95/2015 03-08-2022 in WP No. 5251/2022 passed by the High Court of Judicature at Madras)

ASSOCIATION OF ENGINEERS & ORS. Petitioner(s)

VERSUS

THE STATE OF TAMIL NADU & ORS. Respondent(s)

(IA No. 131793/2022 - EXEMPTION FROM FILING C/C OF THE IMPUGNED JUDGMENT, IA No. 131795/2022 - EXEMPTION FROM FILING O.T. IA No. 154188/2022 - EXEMPTION FROM FILING PAPER BOOKS)

WITH

SLP(C) No. 17267-17268/2022 (XII)

( IA No.138728/2022-EXEMPTION FROM FILING C/C OF THE IMPUGNED JUDGMENT and IA No.138729/2022-EXEMPTION FROM FILING O.T. and IA No.138726/2022-PERMISSION TO FILE PETITION (SLP/TP/WP/..) and IA No.138727/2022-PERMISSION TO FILE ADDITIONAL DOCUMENTS/FACTS/ANNEXURES)

SLP(C) No. 16508-16509/2022 (XII)

(.FOR ADMISSION and I.R. and IA No.138819/2022-EXEMPTION FROM FILING C/C OF THE IMPUGNED JUDGMENT and IA No.138820/2022-EXEMPTION FROM FILING O.T. and IA No.138818/2022-PERMISSION TO FILE ADDITIONAL DOCUMENTS/FACTS/ANNEXURES)

Date : 01-08-2023 These matters were called on for hearing today.

CORAM : HON’BLE MR. JUSTICE B.R. GAVAI
HON’BLE MR. JUSTICE S.V.N. BHATTI

For Petitioner(s) Mr. Gopal Sankaranarayanan, Sr. Adv.
Mr. N Subramaniyan, Adv.
Mr. Pranav Sachdeva, AOR
Mr. Jatin Bhardwaj, Adv.
Ms. Trisha Chandran, Adv.
Ms. Aakriti, Adv.

Mr. Dama Seshadri Naidu, Sr. Adv.
Ms. Preetika Dwivedi, AOR
Mr. Abhisek Mohanty, Adv.
Mr. Naveen Kumar Murthy, Adv.

Mr. N Subramaniyan, Adv.
Ms. Neha Rathi, AOR
Mr. Kamal Kishore, Adv.

For Respondent(s) Mr. Sanjay R. Hegda, Sr. Adv.
Mr. D.kumanan, AOR
Mr. Sheikh F Kalia, Adv.
Mrs. Deepa. S, Adv.

Mr. V. Prakash, Sr. Adv.
Mr. Senthil Jagadeesan, AOR
Ms. Sonakshi Malhan, Adv.
Mr. Sajal Jain, Adv.
Mr. Veerabhadran, Adv.

Mr. B.H. Marlapalle, Sr. Adv.
Mr. K. K. Mani, AOR
Ms. T.archana, Adv.
Mr. Rajeev Gupta, Adv.
Mr. Vinay Rajput, Adv.

Dr. Joseph Aristotle S., AOR

Ms. Neha Rathi, AOR

UPON hearing the counsel the Court made the following

O R D E R

1. Leave granted.

2. We clarify that the respondent(s)/State would be at liberty to issue promotion orders as per the seniority to be determined in accordance with Rule 35(aa) of the Tamil Nadu State and Subordinate Services Rules.

3. Needless to state that the promotions shall be subject to the final outcome of these appeals.

(NARENDRA PRASAD) (R.S. NARAYANAN)
ASTT. REGISTRAR-cum-PS ASSISTANT REGISTRAR

**W.A.No.1767 of 2018**

**R. SURESH KUMAR, J.**

**AND**

**K.KUMARESH BABU, J.**

(Order of the Court was made by R.SURESH KUMAR, J.)

Secretary to the Government, Public Works Department as well as the Engineer-in-Chief, Public Works Department, Government of Tamil Nadu are hereby directed to file separate explanatory affidavit as to what steps they have taken to implement the order passed by the writ Court dated 23.12.2014 made in W.P.No.11148 and 21344 of 2007 in the matter of Association of Engineers, Public Works Department -vs- State of Tamil Nadu and Others.

2. In this context, specific explanation must be given as to whether the 23 private respondents in the said writ petitions, who have been given promotion by way of transfer from Technical Assistants to Assistant Engineers, had been permitted to continue in the said post and if so, on what basis. In this context, whether the Rule that was sought to be amended as per the direction given by the learned Judge has been complied with or not, if not, on what basis the 23 private respondents are permitted to continue, also to be explained.

**R. SURESH KUMAR, J.**

**AND**

**K.KUMARESH BABU, J.**

3. Such an explanatory affidavit shall be filed before this Court during the next date of hearing. For the aforesaid purpose, post the matter on 17.07.2023.

**(R.S.K., J.) (K.B.,J.)**

**03.07.2023**

## நன்கொடை

தமிழ்நாடு பொறியியல் சங்கம், வேலூர் கிளையின் செயலாளர் பொறியாளர் R.வெங்கடேசபாபு, உதவிசெயற்பொறியாளர் அவர்கள் ரூ.20,000/- (இருபது ஆயிரம் மட்டும்) சங்க வளர்ச்சி நிதியாக வழங்கியுள்ளார்.

தமிழ்நாடு பொறியியல் சங்கம், திருச்சி கிளை உறுப்பினர் பொறியாளர் V.பிச்சைமுத்து, செயற்பொறியாளர் (ஓய்வு) அவர்கள் தனது பொங்கும் நிதி முதிர்வு தொகை ரூ.1700/- (ஆயிரத்து ஏழுநூறு மட்டும்)-ல் 50% சங்க வளர்ச்சி நிதியாகவும், 50% திருச்சி கிளைச் சங்க வளர்ச்சி நிதியாகவும் வழங்கியுள்ளார்.

தமிழ்நாடு பொறியியல் சங்கம், திருச்சி கிளை உறுப்பினர் பொறியாளர் P.S.இராஜமாணிக்கம், இளநிலைப்பொறியாளர் (ஓய்வு) அவர்கள் தனது பொங்கும் நிதி முதிர்வு தொகை ரூ.1600/- (ஆயிரத்து ஆறுநூறு மட்டும்)-ல் 50% சங்க வளர்ச்சி நிதியாகவும், 50% திருச்சி கிளைச் சங்க வளர்ச்சி நிதியாகவும் வழங்கியுள்ளார்.

IN THE HIGH COURT OF JUDICATURE AT MADRAS

DATED : 26.06.2023

CORAM

**THE HONOURABLE MR.JUSTICE M.S.RAMESH**

W.P.No.6945 of 2022

and WMP.No.6980 of 2022

R. Soundararajan ... Petitioner

Vs.

1.Deputy Director,
O/o. Deputy Director of Health Services,
Kanchipuram.

2.The Administrative Officer,
District Audit Party,
O/o. Deputy Director of Health Services,
Kancheepuram.

3.Block Medical Officer,
Government Primary Health Centre,
Ezhichur,
Kancheepuram – 631 605. ... Respondents

**Prayer :** Writ Petition filed under Article 226 of the Constitution of India, praying to issue a Writ of Certiorarified Mandamus, calling for the records on the file of the third respondent in Na.Ka.No.633/2021/FIN-1 dated 21.12.2021, quash the same and to direct the respondents to continue to disperse the same allowance without any reduction or recovery.

For Petitioner : Mr.M. Ravi

For Respondents : Mr.P. Gurunathan,
Additional Government Pleader

**ORDER**

The petitioner was appointed as Health Inspector Grade-II in the year 1989 and ultimately, was promoted to the post of Block Health Supervisor in the year 2009. Through the impugned order dated 21.12.2021, the respondents claimed that the petitioner's pay scale was wrongly fixed for the period between August 2010 to November 2021 and an excess amount of Rs.4,58,537/- was paid and thereby has called upon the petitioner and has initiated recovery proceedings.

**2.** The learned counsel for the petitioner drew attention of this Court to the proceedings of the Chief Civil Surgeon, Government Primary Health Centre, Elichur in R.Dis.No.453/2012 dated 03.08.2012, which is the order revising the petitioner's pay scale in accordance with the recommendation of the One Man Commission issued in G.O.Ms.No.297, Finance (PC) Department dated 26.08.2010. He also drew attention to the audit objections, pointing out certain discrepancies and irregular pay fixation.

**3.** Per contra, the learned Additional Government Pleader appearing for the respondents, placed reliance on the averments of the counteraffidavit and submitted that the Government has issued certain clarification dated 16.11.2018, to take necessary action against the excess payments made and therefore, there is no infirmity in the impugned order.

**4.** As pointed out by the learned counsel for the petitioner, the audit objections clearly states that the revision of the pay scales would be extended only to the employees, who have been recommended by the One Man Commission in G.O.Ms.No.297/Finance (PC) Department dated 26.08.2010, Govt.letter No.51082/PC/2010-1Finance dated 15.09.2010 & Govt.letter No.63305/PC/2010-1/Finance (PC) dated 08.11.2010 and not to others and allege excess payment.

**5.** However, the orders of revision of the petitioner's pay scale dated 03.08.2012 reveals that the revision was made based on One Man Commission issued in G.O.Ms.No.297 dated 26.08.2010. Apparently, the internal Audit Department has misconstrued the petitioner's pay revision, which has been rightly made even according to them. Hence, the consequential impugned order of the third respondent, cannot be sustained. Insofar as the ground raised by the learned Additional Government Pleader that the orders of revision and recovery was done pursuant to the Government clarification dated 16.11.2018, is not a ground raised by the respondents in the impugned order. Even otherwise, the Government clarification is only after the revision was made and therefore, cannot have a retrospective effect.

**6.** Above all, the Hon'ble Supreme Court in the case of ***'State of Punjab Vs. Rafiq Masih (White Washer)'*** reported in ***'(2015) 4 SCC 334',*** has held that recovery of any excess payment made, owing to the mistake of the Department for over a period of 5 years, cannot be made. Since the respondents have sought to make recovery from August 2010 onwards, the same is impermissible in law.

**7.** For all the foregoing reasons, in case the respondents have recovered any amount pursuant to the impugned order dated 21.12.2021, the same shall be forthwith return, in any event, within a period of two (2) weeks from the date of receipt of a copy of this order.

**8.** With the above direction, the Writ Petition stands disposed of. No costs. Connected miscellaneous petition is closed.

**26.06.2023**

Speaking/Non-speaking Order

Index:Yes/No
Internet: Yes/No
Neutral Citation: Yes/No

To

1.Deputy Director,
O/o. Deputy Director of Health Services,
Kanchipuram.

2.The Administrative Officer,
District Audit Party,
O/o. Deputy Director of Health Services,
Kancheepuram.

3.Block Medical Officer,
Government Primary Health Centre,
Ezhichur,
Kancheepuram – 631 605.

**M.S.RAMESH,J.**

## நன்கொடை

தமிழ்நாடு பொறியியல் சங்கம், தருமபுரி கிளையின் செயலாளர் பொறியாளர் S.கிருஷ்ணன், உதவிசெயற்பொறியாளர் (ஓய்வு) அவர்கள் தனது பொங்கும்நிதி முதிர்வு தொகை ரூ.1750/- (ஆயிரத்து ஏழுநூற்றைம்பது மட்டும்) சங்க வளர்ச்சி நிதியாக வழங்கியுள்ளார்.

தமிழ்நாடு பொறியியல் சங்கம், திருச்சி கிளை உறுப்பினர் பொறியாளர் N.சிவகுருநாதன், உதவிசெயற்பொறியாளர் (ஓய்வு) அவர்கள் தனது பொங்கும் நிதி முதிர்வு தொகை ரூ.1600/- (ஆயிரத்து ஆறுநூறு மட்டும்)-ல் 50% சங்க வளர்ச்சி நிதியாகவும், 50% திருச்சி கிளைச் சங்க வளர்ச்சி நிதியாகவும் வழங்கியுள்ளார்.

தமிழ்நாடு பொறியியல் சங்கம், திருச்சி கிளை உறுப்பினர் பொறியாளர் N.சித்தார்த்தன், உதவிசெயற்பொறியாளர் (ஓய்வு) அவர்கள் தனது பொங்கும் நிதி முதிர்வு தொகை ரூ.1400/- (ஆயிரத்து நானூறு மட்டும்)-ல் 50% சங்க வளர்ச்சி நிதியாகவும், 50% திருச்சி கிளைச் சங்க வளர்ச்சி நிதியாகவும் வழங்கியுள்ளார்.

தமிழ்நாடு பொறியியல் சங்கம், திருச்சி கிளை உறுப்பினர் பொறியாளர் M.திருநாவுக்கரசு, உதவிசெயற்பொறியாளர் (ஓய்வு) அவர்கள் தனது பொங்கும் நிதி முதிர்வு தொகை ரூ.1400/- (ஆயிரத்து நானூறு மட்டும்)-ல் 50% சங்க வளர்ச்சி நிதியாகவும், 50% திருச்சி கிளைச் சங்க வளர்ச்சி நிதியாகவும் வழங்கியுள்ளார்.

**ABSTRACT**

Establishment - Public Works Department - Tamil Nadu Engineering Service - Temporary Promotion and posting of Superintending Engineer (Civil) as Chief Engineer under Section 47 (1) of the Tamil Nadu Government Servants (Conditions of Service) Act, 2016 - Upgradation of four Superintending Engineers as Special Chief Engineers - Transfer and Postings of Chief Engineer - Orders - Issued.

**Public Works {Estt-I(1)} Department**

**G.O.(2D) No. 9** **Dated:10.07.2023**

**சோபகிருது, ஆனி 25**

**திருவள்ளுவர் ஆண்டு 2054**

Read:

1. From the Engineer in Chief and Chief Engineer (General), Public Works Department, Chennai Letter No. C1(1)/கோ.04/2023-5, dated 23.06.2023.
2. G.O. (Rt) No.91, Public Works (Estt-I(2)) Department, dated 30.06.2023.

**ORDER:**

The following promotions of Superintending Engineers as Chief Engineers in Public Works Department on temporary basis, under Section 47 (1) of the Tamil Nadu Government Servants (Conditions of Service) Act, 2016 and Upgradation of Superintending Engineers as Special Chief Engineers are ordered with immediate effect:-

(i) Thiru. E. Mohanasundaram, Superintending Engineer, Public Works Department, Buildings (Construction & Maintenance) Circle, Tiruvannamalai, who has less than one year left over service before retirement is posted as Special Chief Engineer by upgrading his existing post as Special Chief Engineer in Public Works Department till the date of his retirement.

(ii) Tmt. J. Menaka, Superintending Engineer, Public Works Department, Planning and Designs Circle, Chepauk, Chennai, who has less than one year left over service before retirement is posted as Special Chief Engineer by upgrading her existing post as Special Chief Engineer in Public Works Department till the date of her retirement.

(iii) Thiru. R. Venkatachalam, Superintending Engineer, Public Works Department, Buildings (Construction & Maintenance) Circle, Madurai, who has less than one year left over service before retirement is posted as

Special Chief Engineer by upgrading his existing post as Special Chief Engineer in Public Works Department till the date of his retirement.

(iv) Thiru. P. Shanmugam, Superintending Engineer, Public Works Department, Buildings (Construction & Maintenance) Circle, Salem, who has less than one year left over service before retirement is posted as Special Chief Engineer by upgrading his existing post as Special Chief Engineer in Public Works Department till the date of his retirement.

(v) Thiru. E. Senthil, Superintending Engineer, Public Works Department, Hindu Religious & Charitable Endowments, Chennai (On Deputation basis) is promoted as promoted as Chief Engineer by invoking Section 47 (1) of the Tamil Nadu Government Servants (Conditions of Service) Act, 2016 and posted as Chief Engineer, Public Works Department, Technical Education Circle, Guindy, Chennai vice Thiru S. Kasilingam, Chief Engineer is transferred.

2. The temporary promotion / upgradation ordered in paragraph 1 above, shall be subject to the following conditions:-

(i) Persons temporarily promoted / upgraded shall be replaced as soon as possible by the member of the service, who is entitled to promotion under the Tamil Nadu Government Servants (Conditions of Service) Act, 2016.

(ii) Persons temporarily promoted / upgraded shall not be entitled by reason only of such promotion / upgradation to any preferential claim to future promotion to such higher category.

(iii) Their service in the post of Chief Engineers / Special Chief Engineers shall be liable to be terminated by the appointing authority at any time without notice and without any reason being assigned, under Section 47 (5) of the Tamil Nadu Government Servants (Conditions of Service) Act, 2016.

3. Thiru. S. Kasilingam, Chief Engineer, Public Works Department, Technical Education Circle, Guindy, Chennai is transferred and posted as Chief Engineer, Public Works Department, Coimbatore Region, Coimbatore in the existing vacancy.

**(BY ORDER OF THE GOVERNOR)**

**CHANDRA MOHAN. B**
**PRINCIPAL SECRETARY TO GOVERNMENT**

## நன்கொடை

தமிழ்நாடு பொறியியல் சங்கம், திருநெல்வேலி - தூத்துக்குடி கிளை உறுப்பினர் பொறியாளர் L.S.குப்புசாமி, உதவிசெயற்பொறியாளர் (ஓய்வு) அவர்கள் தனது பொங்கும்நிதி முதிர்வு தொகை ரூ.1400/- (ஆயிரத்து நானூறு மட்டும்) சங்க வளர்ச்சி நிதியாக வழங்கியுள்ளார்.

முதன்மை தலைமைப் பொறியாளர் மற்றும் தலைமைப் பொறியாளர் (பொது),
அலுவலகம், நீர்வளத்துறை, சேப்பாக்கம், சென்னை - 5.

முன்னிலை: பொறி.A. முத்தையா, பி.இ.,
முதன்மை தலைமைப் பொறியாளர் (ம)
தலைமைப் பொறியாளர் (பொது) நீ.வ.து,

செயல்முறை ஆணை எண்.எஸ்.2(4)/28018/2022, நாள் 25.07.2023.

பொருள்: பணியமைப்பு - நீ.வ.து - த.நா.பொ.சா.ப. தொகுதி - 2023-2024 ஆண்டிற்கான இளநிலைப் பொறியாளர் (சிவில்) பதவிக்கான தற்காலிக தேர்ந்த பெயர் பட்டியல் வெளியிடப்பட்டது - ஊட்டுப் பதவியிலிருந்து இளநிலைப் பொறியாளர் (சிவில்) பதவி உயர்வு ஆணை வழங்குதல் - தொடர்பாக.

பார்வை: 1. இவ்வலுவலக கடித எண். எஸ் 2(4)/28018/2022, நாள்.13.09.2022.
2. தனியர்களின் விண்ணப்பங்கள்.
3. இவ்வலுவலக கடித எண். எஸ் 2(4)/29993/2022, நாள்.02.11.2022.
4. இவ்வலுவலக செயல்முறை ஆணை எண். எஸ் 2(4)/28018/2022, நாள்.10.05.2023.

பார்வை 4-இல் காணும் இவ்வலுவலக செயல்முறை ஆணையில் 2023-2024 - ஆம் ஆண்டிற்கான இளநிலைப் பொறியாளர் (சிவில்) பதவி உயர்வுக்கான தற்காலிக தேர்ந்த பெயர் பட்டியல் வெளியிடப்பட்டது. அத்தற்காலிக தேர்ந்த பெயர்பட்டியலில் இடம்பெற்றுள்ள 09 நபர்களின் விவரம் பின்வருமாறு.

| வ. எண். | திருவாளர்கள் | ஊட்டுப்பதவியின் பெயர் | நபர்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1. | V. காசிவிஸ்வநாதன் | தொழில்நுட்ப உதவியாளர்கள் (சிவில்) | 06 நபர்கள் |
| 2. | M. செந்தில் | | |
| 3. | V. ராமன் | | |
| 4 | A. குமார் | | |
| 5. | R. கௌதமன் | | |
| 6. | R. ஞானசேகரன் | | |
| 7. | M. உதயகுமார் | வரைதொழில் அலுவலர்கள் (சிவில்) | 03 நபர்கள் |
| 8. | A.M. சுரேந்தர் | | |
| 9. | T. கோபாலகிருஷ்ணன் | | |
| | | மொத்தம் | 09 நபர்கள் |

2. மேற்காணும் பட்டியலில் இடம்பெற்றுள்ள, 06 தொழில்நுட்ப உதவியாளர்கள் (சிவில்), மற்றும் 03 வரைதொழில் அலுவலர்கள் (சிவில்), இளநிலைப் பொறியாளர் (சிவில்) பதவி உயர்வுக்கு தேவையான 4 ஆண்டு காலம் பணிநிறைவு செய்துள்ளதினாலும், பொதுப்பணித்துறை கணக்குத் தேர்வுகளில் தேர்ச்சி பெற்றுள்ளதினாலும், ஊட்டுப்பதவியில் பணிவரன்முறை செய்து ஆணை வழங்கப்பட்டுள்ளதாலும், இவர்களுக்கு தமிழ்நாடு அரசு பணியாளர் (பணி நிபந்தனைகள்) சட்டம் 2016, பிரிவு 40(2)-இன் படியும், தமிழ்நாடு திருத்திய

ஊதிய விகிதங்கள் 2017-இன்படி, நிலை எண். ரூ. 13, 35900-113500 என்ற ஊதிய விகிதத்தில் தற்காலிகமாக இளநிலைப் பொறியாளர்களாக (சிவில்) பதவி உயர்வு அளித்து ஆணை வழங்கப்படுகிறது.

3. மேலும், தற்காலிக பெயர்பட்டியலில் வரிசை எண்.7 -இல் இடம் பெற்றுள்ள திரு.M. உதயகுமார், வரைதொழில்அலுவலரது 11.05.2023 தேதியிட்ட விண்ணப்பத்தில் தனியர் 2023-2024 ஆண்டுக்கான இளநிலைப் பொறியாளர் (சிவில்) பதவி உயர்வினை தற்காலிகமாக 3 ஆண்டுகளுக்கு துறப்பு செய்வதாக தெரிவித்துள்ளார். பதவி துறப்பு என்பது ஒரு அலுவலருக்கு பதவி உயர்வு வழங்கப்பட்டு தனியர் அப்பதவி உயர்வினை ஏற்க இயலாத நிலையில் அவர் தனது பதவி உயர்வினை தற்காலிகமாக அல்லது நிரந்தரமாக துறப்பதாக தெரிவித்து விண்ணப்பம் சமர்ப்பிக்கலாம். மேலும், திரு. M. உதயகுமார், வரைதொழில்அலுவலரின் பெயர் இளநிலைப் பொறியாளர் (சிவில்) பதவி உயர்வுக்காக, தற்காலிக பெயர்பட்டியலில் மட்டுமே இடம் பெற்றுள்ளதால், தனியரது 11.05.2023 தேதியிட்ட விண்ணப்பத்தில் தெரிவித்துக் கொள்ளப்பட்ட இளநிலைப் பொறியாளர் (சிவில்) பதவிக்கான பதவி துறப்பு விண்ணப்பம் தற்போது ஏற்றுக் கொள்ள இயலாததால், திரு. M. உதயகுமார், வரைதொழில்அலுவலருக்கும், இளநிலைப் பொறியாளர் (சிவில்) பதவி உயர்வு அளிக்கப்படுகிறது.

4. மேலும், தற்காலிக பெயர்பட்டியலில் வரிசை எண்.8 மற்றும் 9-இல் இடம்பெற்றுள்ள திரு.A.M. சுரேந்தர் மற்றும் திரு.T.கோபாலகிருஷ்ணன், வரைதொழில்அலுவலர்கள் தற்போது, பொதுப்பணித்துறையில் பணிபுரிந்து வருகின்றனர். இவர்கள் இளநிலைப் பொறியாளர் (சிவில்) பதவி உயர்வின் போது நீர்வளத்துறையில் பணிபுரிய விருப்பம் தெரிவித்துள்ளதன் அடிப்படையில், மேற்குறிப்பிட்ட இவ்விருவருக்கும், நீர்வளத்துறையில், இளநிலைப் பொறியாளர்களாக (சிவில்) பதவி உயர்வு அளிக்கப்படுகிறது.

5. இப்பதவி உயர்வினைத் தொடர்ந்து, இத்துடன் இணைக்கப்பட்டுள்ள பிற்சேர்க்கையில் அவரவர் பெயருக்கெதிரே கலம் 4-இல் குறிப்பிடப்பட்டுள்ள மண்டலம் / வட்ட / கோட்ட அலுவலகத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு பணியமர்வு செய்யப்படுகின்றனர்.

6. இவர்கள் உரிய அலுவலர்களிடமிருந்து மறு பணியமர்வு ஆணையினைப் பெற்று உரிய இடங்களில் 10 தினங்களுக்குள் இளநிலைப் பொறியாளர் (சிவில்) பணியில் சேர வேண்டும் எனவும், அவ்வாறு பணியில் சேரத் தவறினால் இவர்களுக்கு இளநிலைப் பொறியாளர் (சிவில்)- ஆக பதவி உயர்வு அளிக்கப்பட்ட ஆணை எவ்வித முன்னறிவிப்பும் இன்றி இரத்து செய்யப்படும் எனவும், இவர்கள் இளநிலைப் பொறியாளர் (சிவில்) பதவி உயர்வுக்கான உரிமையினை துறப்பு செய்ததாக கருதப்படும் எனவும் தெரிவிக்கப்படுகிறது. இவர்கள் தங்கள் பதவி உயர்வு உரிமையினைத் துறப்பதாக இருந்தால் குறைந்தது மூன்று ஆண்டுகளுக்கு தற்காலிகமாக துறக்க வேண்டும் என்றும் அதற்கான விண்ணப்பத்தினை உரிய படிவத்தில் பூர்த்தி செய்து உடன் இவ்வலுவலகத்திற்கு அனுப்பி வைக்க வேண்டும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

7. இவர்கள் இளநிலைப் பொறியாளராக பணியில் சேருமிடத்தில் சம்பந்தப்பட்ட அலுவலரிடம் கல்வித்தகுதி, பொதுப்பணித்துறை கணக்குத் தேர்வுகள் தேர்ச்சி பெற்ற விவரம் மற்றும் சொந்த தாலுகா / மாவட்டம் குறித்தான சான்றுகளை சமர்ப்பிக்க வேண்டும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

8. இவர்கள் இளநிலைப் பொறியாளர் (சிவில்) ஆக பணியில் சேர்ந்த விவரத்தினை உரிய மாறுதல், பொறுப்பு மாற்றுச் சான்றுடன் (CTC) உடன் இவ்வலுவலகத்துக்கு தெரிவிக்க வேண்டும் எனவும் சம்பந்தப்பட்ட தலைமைப் பொறியாளர்கள் / கண்காணிப்புப் பொறியாளர்கள் / செயற்பொறியாளர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

9. இவர்களுக்கு உரிய மறுபணியமர்வு ஆணை கிடைக்கப் பெற்றதும் இவர்கள் தற்போது வகித்துவரும் பதவியிலிருந்து உடனடியாக விடுவிக்கப்பட வேண்டும் எனவும் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

10. மேற்குறிப்பிட்ட தனியர்களுக்கு (09 நபர்கள்) வழங்கப்படும் கருத்தியலான பதவி உயர்வு தொடர்பான பணப்பயன்களை தனியர்கள் தமிழ்நாடு அரசு அடிப்படை விதி 27 -இன் துணை விதி. 17- இன்படி பெறத் தகுதியுடையவர்களாவார்கள்.

**இணைப்பு:** பிற்சேர்க்கை

**ஒம்/- A. முத்தையா,**
**முதன்மை தலைமைப் பொறியாளர் மற்றும்**
**தலைமைப் பொறியாளர் (பொது), நீ.வ.து**

மேற்குறிப்பாணை எண்.எஸ்.2(4)/28018/2022, நாள். 25.07.2023.

நகல் சம்பந்தப்பட்ட தலைமைப் பொறியாளர்கள், சம்பந்தப்பட்ட கண்காணிப்புப் பொறியாளர்கள், மற்றும் சம்பந்தப்பட்ட செயற்பொறியாளர்கள் அவர்களுக்கு உரிய மறுபணியமர்வு ஆணை வழங்கும் பொருட்டு அனுப்பி வைக்கப்படுகிறது. இளநிலைப் பொறியாளர் (சிவில்) பதவி உயர்வு வழங்கப்பட்டவர்களுக்கு மறுபணியமர்வு ஆணை கிடைக்கப்பெற்ற 10 தினங்களுக்குள் பணியில் சேர வேண்டும் என்ற நிபந்தனையுடன் மறுபணியமர்வு ஆணையினை வழங்குமாறும் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

இவர்களை சொந்த தாலுகாவில் பணியமர்வு செய்யப்படக்கூடாது என தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

பணியில் சேருமிடத்தில் தொடர்புடைய செயற்பொறியாளர்கள் பணியில் சேரும் நபர்களின் கல்வித்தகுதி, பொதுப்பணித்துறை கணக்குத் தேர்வுகள் தேர்ச்சி பெற்ற விவரம், பதிவுத்தாள் மற்றும் சொந்த தாலுக்கா / மாவட்டம் குறித்தான சான்றுகளை ஆய்வு செய்து உறுதி செய்து கொள்ள வேண்டும் என தெரிவிக்கப்படுகிறது. இவர்களுக்கு உரிய மறு பணியமர்வு ஆணை கிடைக்கப் பெற்றதும், இவர்கள் தற்போது வகித்து வரும் பதவியிலிருந்து உடனடியாக விடுவிக்கப்பட வேண்டும் எனவும் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

இந்த நபர்கள் பதவி உயர்வில் இளநிலைப் பொறியாளர் (சிவில்) ஆக பணியில் சேர்ந்த நாளினை இவ்வலுவலகத்திற்கு தவறாமல் தெரிவிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

**ஒம்/- A. முத்தையா,**
**முதன்மை தலைமைப் பொறியாளர் மற்றும்**
**தலைமைப் பொறியாளர் (பொது), நீ.வ.து**

முதன்மை தலைமைப் பொறியாளர் மற்றும்
தலைமைப் பொறியாளர் (பொது),
நீ.வ.து, சேப்பாக்கம், சென்னை - 5.

**பிற்சேர்க்கை**

**ஊட்டுப்பதவியிலிருந்துஇளநிலைப் பொறியாளர் (சிவில்) - ஆக பதவி உயர்வில் பணியமர்வு செய்யப்படும் விவரம்**

| வ. எண் | பெயர் / பதவி (ம) பிறந்த தேதி | தற்போது பணிபுரியும் அலுவலகம் | இளநிலைப் பொறியாளராக (சிவில்) பதவி உயர்வில் பணியமர்வு செய்யப்படும் இடம் |
|---|---|---|---|
| 1. | V. காசிவிஸ்வநாதன்<br>(19.05.1965)<br>தொழில்நுட்ப உதவியாளர்<br>சேலம் / எடப்பாடி | தரக்கட்டுப்பாடு உபகோட்டம், ஈரோடு<br>தரக்கட்டுப்பாடு கோட்டம், கோயம்புத்தூர் | பிரிவு எண் - 2, திருச்சி.<br>சிறப்பு திட்ட உபகோட்டம் எண்.-1, திருச்சி.<br>சிறப்பு திட்ட கோட்டம், திருச்சி.<br>சிறப்பு திட்ட வட்டம், திருச்சி.<br>தலைமைப் பொறியாளர், நீவது,<br>திருச்சி மண்டலம், திருச்சி. |
| 2. | M. செந்தில்<br>(09.05.1977)<br>தொழில்நுட்ப உதவியாளர்<br>கரூர் / அரவக்குறிச்சி | தரக்கட்டுப்பாடு உபகோட்டம், பழனி.<br>தரக்கட்டுப்பாடு கோட்டம், கோயம்புத்தூர் | நங்காஞ்சியாறு நீர்தேக்க திட்டப்பிரிவு-4, பழனி.<br>நங்காஞ்சியாறு நீர்தேக்க திட்டஉபகோட்டம்-3, பழனி.<br>நங்காஞ்சியாறு வடிநில கோட்டம், பழனி.<br>அமராவதி வடிநில வட்டம், பழனி.<br>தலைமைப் பொறியாளர், நீவது, கோயம்புத்தூர் மண்டலம், கோயம்புத்தூர். |
| 3. | V. ராமன்<br>(16.08.1979)<br>தொழில்நுட்ப உதவியாளர்<br>காஞ்சிபுரம் /<br>சோழிங்கநல்லூர் | காவிரி வடிநில உபகோட்டம், மயிலாடுதுறை.<br>காவிரி வடிநில கோட்டம், (கிழக்கு)<br>மயிலாடுதுறை. | பரவனாறு பாசனப்பிரிவு - 2, பெரியப்பட்டு.<br>பரவனாறு வடிநில உபகோட்டம், குறிஞ்சிப்பாடி.<br>கொள்ளிடம் வடிநில கோட்டம், சிதம்பரம்.<br>வெள்ளாறு வடிநில வட்டம், கடலூர்.<br>தலைமைப் பொறியாளர், நீவது,<br>சென்னை மண்டலம், சென்னை. |
| 4. | A. குமார்<br>(07.03.1970)<br>தொழில்நுட்ப உதவியாளர்<br>கடலூர் / சிதம்பரம் | கொள்ளிடம் வடிநில கோட்டம், சிதம்பரம். | பாசனப் பிரிவு - 1, சங்கராபுரம்.<br>கீழ் பெண்ணையாறு வடிநில உபகோட்டம், சங்கராபுரம்.<br>கீழ் பெண்ணையாறு வடிநில கோட்டம், விழுப்புரம்.<br>பெண்ணையாறு வடிநில வட்டம், திருவண்ணாமலை<br>தலைமைப் பொறியாளர், நீவது,<br>சென்னை மண்டலம், சென்னை. |

| | | | |
|---|---|---|---|
| 5. | R. கௌதமன்<br>(25.07.1970)<br>தொழில்நுட்ப உதவியாளர்<br><br>திருவாரூர் /<br>திருத்துறைப்பூண்டி. | திட்டம் மற்றும் வடிவமைப்பு உபகோட்டம்,<br>திருத்துறைப்பூண்டி.<br>திட்டம் மற்றும் வடிவமைப்பு கோட்டம்,<br>தஞ்சாவூர். | திட்டம் (ம) வடிவமைப்பு பிரிவு எண் - 2,<br>திருத்துறைப்பூண்டி.<br>திட்டம் (ம) வடிவமைப்பு உபகோட்டம்,<br>திருத்துறைப்பூண்டி.<br>திட்டம் (ம) வடிவமைப்பு கோட்டம், தஞ்சாவூர்.<br>திட்ட உருவாக்க வட்டம், திருச்சி<br>தலைமைப் பொறியாளர், திட்ட உருவாக்கம்,<br>சென்னை. |
| 6. | R. ஞானசேகரன்<br>(05.03.1966)<br>தொழில்நுட்ப உதவியாளர்<br><br>தஞ்சாவூர் / பேராவூரணி | தரக்கட்டுப்பாடு உபகோட்டம்,<br>கோயம்புத்தூர்<br>தரக்கட்டுப்பாடு கோட்டம், கோயம்புத்தூர் | பாசனப்பிரிவு எண் -4, தளவாய்ப்பட்டினம்.<br>அமராவதி வடிநில உபகோட்டம் எண்-3,<br>அமராவதி நகர்.<br>அமராவதி வடிநில கோட்டம், தாராபுரம்.<br>அமராவதி வடிநில வட்டம், பழனி.<br>தலைமைப் பொறியாளர், நீவது, கோயம்புத்தூர்<br>மண்டலம், கோயம்புத்தூர். |
| 7. | M. உதயகுமார்<br>(03.05.1985)<br>வரைதொழில் அலுவலர்<br><br>திருநெல்வேலி /<br>ஆலங்குளம் | சிற்றாறு வடிநில கோட்டம், தென்காசி. | சிறப்பு திட்ட பிரிவு எண் - 1, மூலக்கரைப்பட்டி.<br>சிறப்பு திட்ட உபகோட்டம் எண்.-1,<br>மூலக்கரைப்பட்டி.<br>சிறப்பு திட்ட கோட்டம், அம்பாசமுத்திரம்.<br>திட்டங்கள் வட்டம், திருநெல்வேலி..<br>தலைமைப் பொறியாளர், நீவது,<br>மதுரை மண்டலம், மதுரை. |
| 8. | A.M. சுரேந்தர்<br>(24.11.1988)<br>வரைதொழில் அலுவலர்<br><br>திருச்சி / திருச்சி | தொழில் நுட்ப கல்விக் கோட்டம், திருச்சி. | கல்லணை கால்வாய் பிரிவு, மதுக்கூர்.<br>கல்லணை கால்வாய் பிரிவு - 2, பட்டுக்கோட்டை.<br>கல்லணை கால்வாய் கோட்டம், தஞ்சாவூர்.<br>கீழ் காவிரி வடிநில வட்டம், தஞ்சாவூர்.<br>தலைமைப் பொறியாளர், நீவது,<br>திருச்சி மண்டலம், திருச்சி. |
| 9. | T. கோபாலகிருஷ்ணன்<br>(02.02.1986)<br>வரைதொழில் அலுவலர்<br><br>அரியலூர் / அரியலூர் | கட்டட கட்டுமானம் மற்றும் பராமரிப்பு<br>வட்டம், திருவாரூர். | புதிய கட்டளை மேட்டு வாய்க்கால் பிரிவு - 2.<br>செங்கிப்பட்டி.<br>கட்டளை புள்ளம்பாடி உபகோட்டம், திருச்சி.<br>ஆற்று பாதுகாப்பு கோட்டம், திருச்சி.<br>நடுக்காவிரி வடிநில வட்டம், திருச்சி.<br>தலைமைப் பொறியாளர், நீவது,<br>திருச்சி மண்டலம், திருச்சி. |

Government of Tamil Nadu
2023

MANUSCRIPT SERIES

**FINANCE [BUDGET GENERAL - I] DEPARTMENT**

**G.O.No.218, Dated 13th July 2023.**

(Sobakiruthu, Aani-28, Thiruvalluvar Aandu 2054)

**ABSTRACT**

COVID-19 – Economy in expenditure - Control of expenditure introduced in the year 2020-2021 – Continuation of certain major items of expenditure in the year 2023-2024 with modifications – Revoking of General Transfer, Travelling Allowance and Daily Allowance - Orders - Issued.

**Read :-**

1. G.O.Ms.No.249, Finance (BG-I) Department, Dated 21.05.2020.
2. Government Letter No.16069/Finance (BG-I) Department/2020-3, Dated 18.06.2020.
3. G.O.Ms.No.178, Finance (BG-I) Department, Dated 20.06.2022.

**ORDER:**

In the Government Order first read above, as a part of the economy measures taken to combat the unprecedented COVID-19 pandemic during the Financial year 2020-2021, the Government had adopted certain austerity measures to control the expenditure and imposed cuts on the allocation of Budget Estimates 2020-2021, across all the departments of Government.

2. In the Government letter second read above, clarifications had been issued for proper understanding of the issues and effective implementation of the above said economy measures.

3. In the Government Order third read above, the austerity measures on the following items of expenditure were continued with modifications in the year 2022-2023.

i. 305 Office Expenses – 05 Furniture
ii. 319 Machinery and Equipments – 01 Purchase
iii. 321 Motor Vehicles – 01 Purchase
iv. Travelling Allowance & Daily Allowance including General Transfer

4. Due to improvement of present fiscal position, the Government has decided to revisit the austerity measures imposed in 2020-2021 for COVID-19 pandemic. After careful consideration, the Government hereby directs that the following

austerity measures continued in the year 2022-2023 are revoked with effect from the date of issue of orders.

| Sl. No. | Item | Details |
|---|---|---|
| 1 | Travelling Allowance and Daily Allowance | Restriction is revoked. The Travel Entitlements as per applicable rules to be adhered. |
| 2 | Air Travel | |
| 3 | General Transfer | Ban on general transfer is revoked. The usual procedure prior to the introduction of economy austerity measures in the year 2020-2021 shall be followed. |

5. The Government also hereby directs that the other austerity measures imposed in the Government Order third read above shall be continued in the year 2023-2024 as below.

| Sl. No | Item | Austerity measures continued in the year 2023-2024. |
|---|---|---|
| 1 | 305 05 Furniture | The expenditure should be restricted to very exceptional cases like creation of new offices and upkeep of existing infrastructure in offices. |
| 2 | 319 01 Purchase | Except for essential services providers like Health and Family Welfare and Fire & Rescue Services coming under Externally Aided Projects, the procurement of machinery & equipment by the other departments shall be postponed for a year. |
| 3 | 321 01 Purchase | Ban on purchase of new vehicles shall be continued except for replacement of condemned vehicles. |

6. The austerity measures continued in the current financial year as described in the paragraph 5 above, should be enforced strictly and scrupulously by the Departments of Secretariat, Heads of Departments and CEOs of PSUs, Autonomous Boards, Local Bodies, Universities, etc.,. The Secretaries to Government and Heads of Departments shall issue suitable instructions to the subordinate officers to adhere to the same in the current year without any deviation.

(BY ORDER OF THE GOVERNOR)

**T. UDHAYACHANDRAN**
**PRINCIPAL SECRETARY TO GOVERNMENT**

# இயங்கும் உலகம்

## திருச்சி கிளை மற்றும் புதுக்கோட்டை கிளை

தமிழ்நாடு பொறியியல் சங்கம், திருச்சி மற்றும் புதுக்கோட்டை கிளைகளின் பொதுக்குழுக் கூட்டம், 2023-24ஆம் ஆண்டிற்கான புதிய கிளை பொறுப்பாளர்கள் தேர்தல் மற்றும் பணி நிறைவு பெற்ற பொறியாளர்களுக்கு பாராட்டு விழா ஆகிய நிகழ்வுகள் 16.07.2023 அன்று காலை 11.00 மணியளவில் திருச்சி, மன்னார்புரம், கண்ணப்பா ஹோட்டலில் மிக சிறப்பாக நடைபெற்றது.

திருச்சி மற்றும் புதுக்கோட்டை கிளையின் சிறப்பு கூட்டத்திற்கு திருச்சி கிளையின் தலைவர் பொறியாளர் ஆர்.தயாளகுமார் அவர்கள் தலைமை வகித்தார். இந்த சிறப்பு கூட்டத்திற்கு தமிழ்நாடு பொறியியல் சங்க மாநிலப் பொதுச்செயலாளர் பொறியாளர் த.முருகேசன் அவர்கள் மற்றும் கிழக்கு மண்டல செயலாளர் ஆர்.தயாளகுமார் ஆகியோர் கலந்து கொண்டு பெருமை சேர்த்தனர். பொறியாளர் கே.இராமச்சந்திரன் இணைச்செயலாளர் அவர்கள் வரவேற்புரை நிகழ்த்தினார். உறுப்பினர் அறிமுகத்திற்கு பிறகு, திருச்சி கிளைத்தலைவர் அவர்கள் தமது உரையில் உறுப்பினர்கள் வருகையினை மேம்படுத்த நாம் அனைவரும் பாடுபடவேண்டும் என வலியுறுத்தி பேசினார்.

பின்னர் சிறப்பு அழைப்பாளர்களான மாநில பொதுச்செயலாளர் மற்றும் கிழக்கு மண்டல செயலாளர் ஆகியோர் பொன்னாடை அணிவித்து கௌரவிக்கப்பட்டனர்.

இதனையடுத்து கிளையின் செயலாளர் பொறியாளர் கே.ஆர்.ஜெயராமன் அவர்கள் திருச்சி கிளையின் செயல்பாடுகளையும் உறுப்பினர் தங்களது ஒத்துழைப்பை நல்கி சங்கத்தினை வலுப்படுத்த கேட்டுக் கொண்டார். இதனையடுத்து புதுக்கோட்டை கிளையின் செயலாளர் பொறியாளர் ஜி.அண்ணாமலை அவர்கள் தனது உரையில் உறுப்பினர்கள் நாளுக்கு நாள் குறைந்து வருவதையும் இளநிலைப் பொறியாளர் மற்றும் தொழில்நுட்ப உதவியாளர் பணி நியமனத்திற்கு முயற்சி எடுத்து வெற்றி பெற்றால்தான் சங்கம் பலப்படும் என வலியுறுத்தி பேசினார்.

பின்னர் திருச்சி கிளையின் பொருளாளர் எஸ்.சி.எஸ்.முரளிதரன் அவர்கள் பேசுகையில் சங்க கட்டிட அறைகள் மற்றும் கழிவறை கட்டுமானங்கள் நாளுக்கு நாள் பழுதடைந்து வருவதாக எடுத்துரைத்து பின்னர் கிளையின் வரவு, செலவு கணக்கினை உறுப்பினர் பார்வைக்கு வைத்து ஒப்புதல் பெற்றார்.

இதனைத்தொடர்ந்து, மாநில பொதுச்செயலாளர் அவர்கள் தமது சிறப்புரையில் தமிழ்நாடு பணியாளர் தேர்வாணையம் மூலம் இளநிலைப் பொறியாளர்கள் தேர்வு விரைவில் பெற்றுத்தர நடவடிக்கை மேற்கொள்வதாக உறுதியளித்தார். மேலும் இளநிலைப் பொறியாளர் / உதவிப் பொறியாளர்களுக்கு உதவிசெயற்பொறியாளர் பதவி உயர்வுக்காக பொதுப்பணித்துறை மற்றும் நீர்வளத்துறையில் மேற்கொள்ளப்பட்டு வரும் நடவடிக்கைகளையும் தொழில்நுட்ப உதவியாளரிலிருந்து உதவிப் பொறியாளர்களாக பெயர் மாற்றம் பெற்றவர்களது பதவி உயர்வு சம்பந்தமாக உச்சநீதிமன்றத்தில் எடுக்கப்பட்டுவரும் இடைவிடாத தொடர் நடவடிக்கைகளைப்பற்றி விரிவாக எடுத்துரைத்தார். செயற்பொறியாளர் பதவி உயர்வு எண்ணிக்கை பட்டியலின் முன்னேற்றம் குறித்தும் தெளிவாக எடுத்துரைத்தார். மேலும் நமது பொறியியல்

சங்கத்தின் சொத்துக்களை இனிவரும் காலங்களில் முறையாக காப்பாற்றி பாதுகாத்திட தமிழ்நாடு பொறியியல் சங்க அனைத்து கிளைகளில் இருந்தும் பொறுப்பாளர்களை நியமித்து கமிட்டி அமைத்து செயல்படுத்தும் வகையில் மிகவும் வலியுறுத்தி பேசினார். மேலும் திருச்சி கிளையின் இல்ல புனரமைப்பிற்கு தேவையான அனைத்து உதவிகளையும் மையச்சங்கம் செய்யும் என உறுதியளித்தார்.

மேலும் பொதுச்செயலாளர் அவர்கள் தமது உரையில் இன்றைய கூட்டத்தில் பணியில் உள்ள உறுப்பினர்களைவிட பணிநிறைவு பெற்ற உறுப்பினர்கள் அதிகமாக கலந்து கொண்டு சிறப்பித்ததை சுட்டிக்காட்டியும் கூட்டத்திற்கு வருகை தராத உறுப்பினர்களை தமது முழு ஒத்துழைப்பையும் ஈடுபாட்டினையும் நல்கி பலம் சேர்க்க வேண்டுமெனவும் கேட்டுக் கொண்டு சிறப்பாக உரை நிகழ்த்தி அமர்ந்தார். பிறகு உறுப்பினர்கள் தங்களது கருத்துக்களையும் சந்தேகங்களையும் கேட்டு, அதற்கு பொதுச்செயலாளர் அவர்கள் விரிவாகவும், தெளிவாகவும் விளக்கமளித்தார்.

பின்னர் திருச்சி மற்றும் புதுக்கோட்டை கிளையில் இருந்து சிறப்பாக பணியாற்றி பணிநிறைவு பெற்ற பொறியாளர்கள் கே.ஆர்.ஜெயராமன், வி.பிச்சைமுத்து, எஸ்.இந்திராகாந்தி, எம்.திருநாவுக்கரசு, ஏ.சாந்தி, எம்.ராஜா, என்.சிவகுருநாதன், ஏ.சின்னக்கண்ணு, என்.சித்தார்த்தன், பி.எஸ்.இராஜமாணிக்கம், எம்.சையதுகான்முகமது ஆகியோர் அனைவருக்கும் மாநில பொதுச்செயலாளர் அவர்கள் நினைவு பரிசு வழங்கி பொன்னாடை அணிவித்து கௌரவித்தார்கள்.

பின்னர் இந்த கூட்டத்திற்கு வருகை புரிந்த உறுப்பினர்கள் அனைவரையும் உற்சாகப்படுத்தும் வகையில் பொன்னாடை அணிவித்து கௌரவிக்கப்பட்டனர்.

இதனையடுத்து, 2023-24ம் ஆண்டிற்கான, திருச்சிக் கிளைப் பொறுப்பாளர்கள் தேர்தல், சிறப்பு அழைப்பாளர்கள் மாநில பொதுச்செயலாளர் மற்றும் கிழக்கு மண்டல செயலாளர் தலைமையில் நடைபெற்றது. கிளைப்பொதுக்குழு கூட்டத்திற்கு வருகைபுரிந்திருந்த அனைத்து உறுப்பினர்களும் ஏகமனதாக தீர்மானித்து 2022-23 ஆண்டு செயல்பட்ட கிளைப் பொறுப்பாளர்களையே இந்த ஆண்டிற்கும் தொடர்ந்து பணியாற்ற முடிவெடுத்ததின் அடிப்படையில் கீழ்கண்டவாறு கிளைப்பொறுப்பாளர்கள் தேர்வு செய்யப்பட்டதாக அறிவிக்கப்பட்டார்கள்.

| | | |
|---|---|---|
| 1) தலைவர் | : | பொறி.ஆர்.தயாளகுமார். |
| 2) உப தலைவர் | : | பொறி.என்.முருகேசன். |
| 3) செயலாளர் | : | பொறி.கே.ஆர்.ஜெயராமன். |
| 4) இணைச் செயலாளர்-1 | : | பொறி.எஸ்.தங்கையன். |
| 5) இணைச் செயலாளர்-2 | : | பொறி.கே.இராமச்சந்திரன். |
| 6) பொருளாளர் | : | பொறி.எஸ்.சி.எஸ்.முரளிதரன். |

மேலும், 2023-24ம் ஆண்டிற்கான புதுக்கோட்டை கிளைப் பொறுப்பாளர்கள் தேர்தல் நடைபெற்று, கீழ்கண்டவாறு கிளைப் பொறுப்பாளர்கள் தேர்வு செய்யப்பட்டனர்.

| | | |
|---|---|---|
| 1. தலைவர் | : | பொறி.டி.எஸ்.பார்த்திபன். |
| 2. உப தலைவர் | : | பொறி.ஆர்.ரமேஷ்குமார். |
| 3. செயலாளர் | : | பொறி.ஜி.அண்ணாமலை. |
| 4. இணைச் செயலாளர்-1 | : | பொறி.ஆர்.ரவிச்சந்திரன். |
| 5. இணைச் செயலாளர்-2 | : | பொறி.ஆர்.நாராயணசாமி. |
| 6. பொருளாளர் | : | பொறி.என்.பாஸ்கர். |

தேர்வு செய்யப்பட்ட புதிய பொறுப்பாளர்கள் உறுதிமொழி எடுத்துக் கொண்டனர். கூட்டத்தின் இறுதி நிகழ்வாக திருச்சி கிளையின் பொருளாளர் எஸ்.சி.எஸ்.முரளிதரன் அவர்கள் நன்றி நவில அறுசுவை நிறைந்த மதிய உணவுடன் சங்க கூட்டம் மிக சிறப்பாக நிறைவுற்றது.

இதனையடுத்து கீழ்கண்ட தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டன.

1) தொழிநுட்ப உதவியாளர் பதவியிலிருந்து உதவிப்பொறியாளராக பெயர் மாற்றம் பெற்ற பொறியாளர்களுக்கும் விரைந்து, தொடர் நடவடிக்கை எடுத்து உதவி செயற்பொறியாளர்களாக பதவி உயர்வு பெற்றுத்தர தொடர் நடவடிக்கை மேற்கொள்ள இந்த கிளை மையச்சங்கத்தினை வலியுறுத்துகிறது.

2) தமிழ்நாடு பொறியியல் சங்கத்தினை வலுப்படுத்தும் வகையிலும், உறுப்பினர்களின் எண்ணிக்கையை அதிகரிக்கும் வகையிலும் தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையத்தின் மூலம் இளநிலைப் பொறியாளர்களை தெரிவு செய்யவும், பிரிவுக்கொரு தொழில்நுட்ப உதவியாளர் பதவி பெற்றுத்தரவும், இந்த கிளைச்சங்கம் மையச்சங்கத்தினை வலியுறுத்தி கேட்டுக்கொள்கிறது.

---

**தமிழ்நாடு பொறியியல் சங்கம் பொதுப்பணித்துறை & நீர்வளத்துறை,**
**சேப்பாக்கம், சென்னை - 5.**

## மாநில பொதுக்குழுக் கூட்டம் அறிவிப்பு

வருகிற ஆகஸ்ட் திங்கள் 27ம் தேதி நமது சங்கத்தின் மாநில பொதுக்குழுக் கூட்டம் மற்றும் மையச் சங்க பொறுப்பாளர்கள் தேர்தல் சேலத்தில் நடைபெற உள்ளது.

**இடம்: பொறியாளர் C.சண்முகப்பெருமாள் அரங்கம்,**
**தமிழ்நாடு பொறியியல் சங்க சேலம் கிளை கட்டடம்,**
**பொதுப்பணித்துறை ஆய்வு மாளிகை வளாகம்,**
**அஸ்தம்பட்டி, சேலம் - 636 007.**

பொதுக்குழு உறுப்பினர்கள், சிறப்பு அழைப்பாளர்கள், மூத்த பொறியாளர்கள் அனைவரும் கூட்டத்தில் தவறாது கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

**பொறி. என். முருகேசன்**
**செயலாளர் அமைப்பு & சட்டம்**

---

## நன்கொடை

தமிழ்நாடு பொறியியல் சங்கம், தருமபுரி கிளையின் உறுப்பினர் பொறியாளர் P.தங்கவேல், இளநிலைப் பொறியாளர் (ஓய்வு) அவர்கள் தனது மகன் திருமணத்தை முன்னிட்டு ரூ.1000/- (ஆயிரம் மட்டும்) சங்க வளர்ச்சி நிதியாக வழங்கியுள்ளார்.

**கடலூர் கிளை**

தமிழ்நாடு பொறியியல் சங்கம், கடலூர் கிளையின் பொதுக்குழுக் கூட்டம் மற்றும் 2023-24ஆம் ஆண்டிற்கான புதிய கிளை பொறுப்பாளர்கள் தேர்தல் கூட்டம் 16.07.2023 ஞாயிற்றுகிழமை அன்று காலை 11.00 மணியளவில் சிதம்பரம் பொதுப்பணித்துறை வளாகத்தில் நடைபெற்றது.

கடலூர் கிளையின் தலைவர் பொறியாளர் வி.ஞானசேகர் அவர்கள் கூட்டத்திற்கு தலைமை வகித்தார். இந்த கூட்டத்திற்கு தமிழ்நாடு பொறியியல் சங்கத்தின் பொங்கும் நிதிச்செயலாளர் பொறியாளர் ந.புண்ணியகோட்டி அவர்கள் மற்றும் வடக்கு மண்டல செயலாளர் கே.சேரலாதன் ஆகியோர் சிறப்பு அழைப்பாளர்களாக கலந்து கொண்டனர்.

கடலூர் கிளையின் செயல்பாடுகள் குறித்து கிளையின் தலைவர் பொறியாளர் வி.ஞானசேகர் அவர்கள் விரிவாக பேசினார். கிளையின் பொருளாளர் பொறியாளர் பி. பார்த்தீபன் அவர்கள் வரவு செலவு அறிக்கையினை அவையில் சமர்ப்பித்தார்.

சிறப்பு அழைப்பாளர் பொங்கும்நிதிச்செயலாளர் பொறியாளர் ந.புண்ணியகோட்டி அவர்கள் மையச்சங்க நடவடிக்கைகள் குறித்து விரிவாக எடுத்துக் கூறினார். வடக்கு மண்டல செயலாளர் பொறியாளர் கே.சேரலாதன் அவர்கள் கிளை மற்றும் மையச்சங்க செயல்பாடுகள் குறித்து பேசினார்.

பின்னர் 2023-24ம் ஆண்டிற்கான, கடலூர் கிளையின் பொறுப்பாளர்கள் தேர்தல் நடைபெற்று கீழ்க்கண்ட பொறியாளர்கள் கிளைப்பொறுப்பாளர்களாக தேர்வு செய்யப்பட்டனர். பின்னர் கிளையின் தலைவர் பொறியாளர் வி. ஞானசேகர் அவர்கள் நன்றி நவில கூட்டம் இனிதே நிறைவுற்றது.

| | | |
|---|---|---|
| 1) தலைவர் | : | பொறி. வி. ஞானசேகர் |
| 2) உப தலைவர் | : | பொறி. ஆர். எத்திராஜிலு |
| 3) செயலாளர் | : | பொறி. பி. பார்த்தீபன் |
| 4) இணைச் செயலாளர்-1 | : | பொறி. கே. இரவிச்சந்திரன் |
| 5) இணைச் செயலாளர்-2 | : | பொறி. த. படைக்காத்தான் |
| 6) பொருளாளர் | : | பொறி. ஏ. குமார் |

கீழ்கண்ட தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டன.

1) தமிழ்நாடு பொறியியல் சங்கத்தின் உறுப்பினர்கள் சிறப்பு தலைமைப் பொறியாளர்களாக பதவி உயர்வு பெற்றமைக்கு கடலூர் கிளையின் சார்பாக பாராட்டுக்கள் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

2) 2022-2023 ஆம் ஆண்டிற்கான கிளையின் வரவு, செலவு அறிக்கைக்கு ஒப்புதல் அளித்து தீர்மானம் நிறைவேற்றப்படுகிறது.

3) பிரிவுக்கு ஒரு தொழில்நுட்ப உதவியாளர் பதவிகளை தேர்வு செய்ய மையச்சங்கம் முயற்சி மேற்கொள்ள தீர்மானம் நிறைவேற்றப்படுகிறது.

4) இளநிலைப் பொறியாளர் பதவிகளை தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் மூலம் தேர்வு செய்திட மையச்சங்கம் முயற்சி மேற்கொள்ள தீர்மானம் நிறைவேற்றப்படுகிறது.

## பணி ஓய்வு பெற்றவர்கள்

(அரசாணை (வாலாயம்) எண். 306 நீர்வளத் (டி2) துறை நாள் 31.07.2023)

| வ.எண் | பெயர் (திருவாளர்கள்) | பதவி |
|---|---|---|
| 1. | N. ஞானசேகர் | தலைமைப் பொறியாளர் |
| 2. | M. மரிய ஹென்றி ஜார்ஜ் | சிறப்பு தலைமைப் பொறியாளர் |
| 3. | S. முத்து பர்வத வர்தினி | சிறப்பு தலைமைப் பொறியாளர் |
| 4. | C. சின்னையா | செயற்பொறியாளர் |
| 5. | R. சுசித்ரா | உதவிசெயற்பொறியாளர் |
| 6. | S. குமார் | உதவிசெயற்பொறியாளர் |

(ஆளுநரின் ஆணைப்படி)

சந்தீப் சக்சேனா

அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்

## பணி ஓய்வு பெற்றவர்கள்

(அரசாணை (வாலாயம்) எண். 102 பொதுப்பணித் (பணி 1-2) துறை நாள் 31.07.2023)

| வ.எண் | பெயர் (திருவாளர்கள்) | பதவி |
|---|---|---|
| 1. | P. தேவி | சிறப்பு தலைமைப் பொறியாளர் |
| 2. | M. கோபாலகிருஷ்ணன் | செயற்பொறியாளர் |
| 3. | S. சுரேஷ் | தலைமை வரைதொழில் அலுவலர் |

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**சந்தர மோகன். B**

**அரசு முதன்மைச் செயலாளர்**

முதன்மை தலைமைப் பொறியாளர் மற்றும் தலைமைப் பொறியாளர் (பொது) பொதுப்பணித்துறை, சேப்பாக்கம், சென்னை - 5 அவர்களின் செயல்முறை ஆணை எண்.எஸ்.1(1)/005143/2023-7/நாள்.31.07.2023ன் படி 31.07.2023 பி.ப அரசு பணியிலிருந்து ஓய்வு பெற்றவர்கள்

| வ.எண். | பெயர் | பிறந்த தேதி | பதவி |
|---|---|---|---|
| 1. | S.கல்யாணசுந்தரம் | 04.07.1963 | இளநிலைப் பொறியாளர் |

ஒம்/- கே.பி.சத்தியமூர்த்தி

முதன்மை தலைமைப் பொறியாளர் மற்றும்

தலைமைப் பொறியாளர் (பொது) பொபது

முதன்மை தலைமைப் பொறியாளர் மற்றும் தலைமைப் பொறியாளர் (பொது) நீர்வளத்துறை, சேப்பாக்கம், சென்னை - 5 அவர்களின் செயல்முறை ஆணை எண்.எஸ்.1(2)/20002/2023/நாள். 31.07.2023ன் படி 31.07.2023 பி.ப அரசு பணியிலிருந்து ஓய்வு பெற்றவர்கள்

| வ.எண். | பெயர் | பிறந்த தேதி | பதவி |
|---|---|---|---|
| 1. | T. ஆனந்தன் | 15.07.1963 | இளநிலைப் பொறியாளர் |

ஒம்/- A.முத்தையா

முதன்மை தலைமைப் பொறியாளர் மற்றும்

தலைமைப் பொறியாளர் (பொது) நீவது

# திருமண அழைப்பிதழ்

அன்புடையீர் வணக்கம்.

நிகழும் மங்களகரமான சோபகிருது வருடம் ஆவணி மாதம் 24-ம் நாள் (10.09.2023) ஞாயிற்றுகிழமை ஏகாதசி திதி, புனர்பூசம் நட்சத்திரம், சித்தயோகம் கூடிய சுபயோக சுபதினத்தில் காலை **5.00 மணிக்குமேல் 6.00 மணிக்குள்** பிரம்ம முகூர்த்தத்தில்

நாமக்கல் மாவட்டம், மோகனூர் வட்டம், வளையப்பட்டி கிராமம்,
தெய்வத்திருவாளர்கள் **பழனியாண்டி கவுண்டர் - கருப்பாயி அம்மாள்** அவர்களின் மகன்வழி பேரனும், நாமக்கல் வட்டம், A.S. பேட்டை தெய்வத்திரு. **சின்னுசாமி - திருமதி. சின்னபிள்ளை** ஆகியோரின் மகள்வழிப் பேரனும், எங்களது குமாரனுமான செம்பன்குல திருவளர்செல்வன்

**T.நவின்,** **B.E., PGDB.,**

(Assistant Manager, South Indian Bank)

சேலம் மாவட்டம், வாழப்பாடி வட்டம், கருமாபுரம் கிராமம், திரு.**செங்கோட்டையன் - திருமதி.குப்பாயம்மாள்** அவர்களின் மகன்வழி பேத்தியும், காரிப்பட்டி, தெய்வத்திருவாளர்கள். **R.மோகநாதன் - M.அலமேலு** அவர்களின் மகள்வழிப் பேத்தியும், எங்களது குமாரத்தியுமான பொருள்தந்தகுல திருவளர்செல்வி

**P.கீர்த்தனா,** **M.Sc. (Horti).,**

ஆகியோரது திருமணம் பெரியோர்களால் நிச்சயிக்கப்பட்டு மேற்படி திருமணம் சேலம் - நாமக்கல் சாலை ஆட்டையாம்பட்டி பிரிவு **ராசி மஹாலில்** நடைபெற உள்ளதால் தாங்கள் தங்கள் சுற்றமும் நட்பும் சூழ வருகைதந்து மணமக்களை வாழ்த்தியருள வேண்டுமாய் அன்புடன் அழைக்கின்றோம்.

*தங்கள் அன்புள்ள,*

Er. **P.தங்கவேல்,** JE., Red PWD
திருமதி. **T. மாதேஸ்வரி**
மாமா - அக்கா:
திரு. **T**.கார்த்திகேயன்,M.B.A., (UK),
திருமதி. **T. பிரியா,** M.E.,
மாஸ்டர்: **T. ப்ரணவ்**
**A.S. பேட்டை, நாமக்கல்.**
**செல்: 94869 88400, 94439 40151.**

**வரவேற்பு**
**09.09.2023 சனிக்கிழமை**
**மாலை 06.00 - 9.00மணி.**

தங்கள் வரவை அன்புடன் எதிர்நோக்கும்
**உறவினர்களும் - நண்பர்களும்**

## தமிழ்நாடு பொறியியல் சங்கம், பொ.ப.துறை & நீ.வ.துறை, சேப்பாக்கம், சென்னை-5.

## தலைமைச் சங்க பொறுப்பாளர்கள் தேர்தல் 2023-2024

சங்க பொதுக்குழுக்கூட்டம் சேலத்தில் ஆகஸ்டு 27 தேதியில் நடைபெறும். அது சமயம் 2023-2024 ஆம் ஆண்டிற்கான கீழ்க்கண்ட தலைமைச் சங்க பொறுப்பாளர்கள் பதவிக்கு தேர்தல் நடைபெறும்.

1. தலைவர்
2. துணைத்தலைவர்
3. பொதுச் செயலாளர்
4. செயலாளர் (அமைப்பு & சட்டம்)
5. செயலாளர் (வெளியீடு)
6. செயலாளர் (நிதி)
7. செயலாளர் (பொங்கும் நிதி)

**மண்டலச் செயலாளர்கள்**

8. வடக்கு 9. கிழக்கு 10.தெற்கு 11. மேற்கு 12. மையம்

**நெறிமுறைகள்**

1. போட்டியிட விரும்பும் உறுப்பினர் கடந்த 2021-2023 மூன்று ஆண்டுகள் தொடர்ந்து சங்க உறுப்பினர்களாகவோ அல்லது வாழ்நாள் உறுப்பினராகவோ இருக்க வேண்டும்.
2. மையச்சங்க பொறுப்பாளராக போட்டியிட விரும்புவோர் கிளைச்சங்கத்தில் குறைந்த பட்சம் மூன்று ஆண்டுகள் பொறுப்பாளராக இருந்திருக்க வேண்டும்.
3. வேட்பாளர் பொங்கும் நிதி உறுப்பினராக இருத்தல் வேண்டும்.
4. வேட்பாளர் பெயர் உரிய வேட்பு மனுவின் வேட்பாளர் சம்மதத்துடன் மையச்சங்க பொறுப்பாளர் அல்லது கிளைச்சங்க பொறுப்பாளர் ஒருவராலோ (அ) பலராலோ முன்மொழிந்து, வழி மொழிந்திருத்தல் வேண்டும்.
5. உறுப்பினர்கள் எத்தனை பதவிகளுக்கு போட்டியிட்டாலும் வெற்றி பெற்ற பின் அவரது விருப்பப்படி ஏதாவது ஒரு பதவியைத்தான் தக்க வைத்துக் கொள்ள முடியும்.
6. வரிசை எண்.3 லிருந்து 7 வரையிலுள்ள பதவிகளுக்கு போட்டியிட விரும்புவோர் சென்னை பெருநகர எல்லைக்குள் பணியாற்றுபவராக இருத்தல் அவசியம்.
7. மண்டல செயலாளர்கள் பதவிகளுக்கு போட்டியிட விரும்புபவர்கள் அந்தந்த மண்டல எல்லைக்குள் பணி புரிய வேண்டும்.

| மண்டலம் | | கிளைகள் |
|---|---|---|
| அ. மண்டலம் இல்லை | : | சென்னை. |
| ஆ. வடக்கு மண்டலம் | : | காஞ்சிபுரம், வேலூர், கடலூர். |
| இ. கிழக்கு மண்டலம் | : | திருச்சி, தஞ்சாவூர், திருவாரூர் -நாகை, புதுக்கோட்டை |
| ஈ. தெற்கு மண்டலம் | : | விருதுநகர், திருநெல்வேலி -தூத்துக்குடி, கன்னியாகுமரி, |
| உ. மேற்கு மண்டலம் | : | தருமபுரி, சேலம், ஈரோடு, கோயம்புத்தூர்-பொள்ளாச்சி. |
| ஊ. மைய மண்டலம் | : | திண்டுக்கல், தேனி, மதுரை, சிவகங்கை, இராமநாதபுரம். |

வேட்பு மனுக்கள் நேரிடையாக எல்லா பதவிகளுக்கும் தேர்தல் நாள் 27.08.2023 அன்று தேர்தல் ஆணையரால் பிற்பகல் 2.00 மணி வரையிலும் பெற்றுக் கொள்ளப்படும்.

பொதுக்குழு உறுப்பினர்கள் அனைவரும் வாக்களிக்கத் தகுதி படைத்தவர்கள். தேர்தல் அலுவலரின் முடிவே இறுதியானதாகும்.

**வாக்காளர்கள்**

| | | |
|---|---|---|
| மையச் சங்க பொறுப்பாளர்கள் | : | 12 |
| கிளைச் சங்க பொறுப்பாளர்கள் 20 X 6 | : | 120 |
| | | 132 |

அனைத்து பொதுக்குழு உறுப்பினர்களும் கூட்டத்தில் தவறாது கலந்து கொண்டு மையச் சங்க பொறுப்பாளர்களை தேர்ந்தெடுக்குமாறு கேட்டுக் கொள்கிறோம்.

**-பொறியாளர். என்.முருகேசன், செயலாளர் அமைப்பு & சட்டம்**

தமிழ்நாடு பொறியியல் சங்கம் திருச்சி கிளை மற்றும் புதுக்கோட்டை கிளைகளின் பொதுக்குழுக்கூட்டத்தில் பதவி உயர்வு மற்றும் பணிஓய்வு பெற்ற பொறியாளர்களுக்கு பாராட்டு தெரிவித்தல்.











தமிழ்நாடு பொறியியல் சங்கம் விருதுநகர் கிளையின் தலைவர் பொறியாளர் M.கோபாலகிருஷ்ணன், செயற்பொறியாளர் அவர்கள் பணிஓய்வை முன்னிட்டு தெற்கு மண்டல செயலாளர் மற்றும் விருதுநகர் கிளைப் பொறுப்பாளர்கள் வாழ்த்து தெரிவித்தனர்.



Under Postal Regd No. TN/CH/(C)/591/2022-2024 & WPP LICENCE No.TN/PMG(CCR)/WPP-664/2022-2024,
Date of Publiciation 1st Week of Every Month. R.N.I. No.R.33590/1978. Posted on 5-11 of Every Month

AUGUST 2023

# வாழ்த்துகிறோம்

மதுரையில் முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞர் நூற்றாண்டு நூலகம் திறப்பு விழாவில் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களிடமிருந்து நினைவு பரிசு பெறும் பொதுப்பணித்துறை முதன்மை தலைமைப் பொறியாளர் மற்றும் தலைமைப் பொறியாளர் (பொது), பொறியாளர் K.P.சத்தியமூர்த்தி அவர்கள்.




இரவு பகல் பாராமல் மிகக்கடுமையாக உழைத்து மிக குறுகிய காலத்தில் சிறப்பாக பணியை முடித்த முதன்மை தலைமைப் பொறியாளர் அவர்களுக்கும் அந்த பணியில் ஈடுபட்ட அனைத்து பொறியாளர்களுக்கும், பணியாளர்களுக்கும் வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறோம்.

தொலைபேசி : சங்கம் : 28525786
இல்லம் : 28551993

**பொறியியல் கதிர்**
**PORIYIYAL KADHIR**

அனுப்புநர்:
தமிழ்நாடு பொறியியல் சங்கம்
சேப்பாக்கம், சென்னை - 600 005.
முகவரி சரியில்லையேல் திருப்பி அனுப்பவும்

**REGD. NEWS PAPER**
POSTED AT EGMORE RMS1/ PATRIKA CHANNEL
POSTED WITHOUT PRE-PAYMENT SYSTEM

பெறுநர்

PRINTED BY:Mr. J. VINOTH, AND PUBLISHED BY Er.S.K. KARUPPUCHAMY, D.C.E.AMIE., ON BEHALF OF TAMIL NADU ENGINEERING ASSOCIATION PWD, AND PRINTED AT AALAYAM ART PRINTERS, NO.5, HAJ HUSSAIN STREET, ICE HOUSE, CHENNAI-14. AND PUBLISHED AT TAMIL NADU ENGINEERING ASSOCIATION PWD, PWD CAMPUS, CHEPAUK, CHENNAI-5 EDITOR Er.S.K. KARUPPUCHAMY,